No. of Printed Pages : 7

**5001**

பதிவு எண் | | | | | | |

**JUNE 2015**

# பகுதி I – தமிழ் – முதல் தாள்

(செய்யுளும், இலக்கணமும்)

# Language – Part I – TAMIL – Paper I

நேரம் : 3 மணி ] [ மதிப்பெண்கள் : **100**

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் VI -க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்

I. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் நான்கனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளின்** மிகாது விடை எழுதுக. **4x2=8**

1. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்களைக் கூறுக.

2. எட்டுத்தொகை நூல்கள் யாவை?

3. நடுங்கவரும் துன்பம் யாருக்கில்லை?

4. இரட்டைக்காப்பியங்கள் யாவை?

5. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை?

6. உமறுப்புலவர் எழுதிய நூல்கள் யாவை?

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளில் விடை எழுதுக. 3x4=12

7. இறைவாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளைக் கூறுக.

8. 'பராய்க்கடன் உரைத்தல்' - விளக்குக.

9. 'நன்றி செய்தாரது நட்பினை விடலாகாது' - ஏன்?

10. 'களிநடம் புரியக்கண்டேன்' - என்று அனுமன் உரைத்தன யாவை?

11. பாண்டியன் பரிசாகிய பேழைக்குள் இருந்தன யாவை?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளில் விடை எழுதுக. 3x4=12

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை?

13. சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை?

14. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பற்றி குறிப்பெழுதுக.

15. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை?

16. அறிவர்க்கும் அறிவனாகிய அருகதேவனை நீலகேசி வழிபட்டமை எவ்வாறு?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு இருபது வரிகளில்** விடை தருக. 1x8=8

17. செய்ந்நன்றியறிதல் பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

18. கோலியாத்து என்ற அரக்கனின் வருகையும் தாவீதன் அவனை வென்ற திறத்தினையும் வரைக.

19. பாரதியார் காட்டும் அந்திவான வருணனையைத் தொகுத்து வரைக.

V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. **4x1=4**

20. ''கயன்முள்ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே''

(அ) இச்செய்யுள் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

(ஆ) மேற்கண்ட செய்யுள் அடிகளின் ஆசிரியர் யார்?

(இ) திரைகவுள் - பொருள் தருக.

(ஈ) முதுமை எவ்வாறு சுட்டப்படுகிறது?

(அல்லது)

21. ''வெறுங்கை என்பது மூடத்தனம் - உன்
விரல்கள் பத்தும் மூலதனம்!''

(அ) இவ்வடி இடம் பெற்றுள்ள பாடலின் ஆசிரியர் யார்?

(ஆ) 'மூலதனம்' எவை?

(இ) 'மூடத்தனம்' எது?

(ஈ) இவ்வடி உணர்த்தும் கருத்து யாது?

VI. 22. ''ஒன்றேயென்னின்'' எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. **4+2=6**

23. ''எண்பொருள'' எனத் தொடங்கும் குறட்பாவையும்
''வரைத்து'' என முடியும் குறட்பாவையும் அடிபிறழாமல் எழுதுக. **2+2=4**

VII. 24. எவையேனும் **இரண்டு** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக : **2+2=4**

(அ) ஏகுவாய்
(ஆ) திறந்த
(இ) அழைப்பான்
(ஈ) அறைதல்
(உ) நோக்கி
(ஊ) விடுவார்

[ திருப்புக

25. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக. **3x2=6**

(அ) அடி வாழ்த்துவம்

(ஆ) திருந்துமொழி

(இ) தழீஇ

(ஈ) இனிதினிது

(உ) தங்கத்திமிங்கலம்

(ஊ) பேரறிவு

26. எவையேனும் இரண்டு தொடர்களைப் புணர்ச்சி விதி தருக : **2x2=4**

(அ) முதுமரம்

(ஆ) உயிருண்டு

(இ) பூங்கொடியாள்

(ஈ) நன்றன்று

(உ) மணிக்கழுத்து

(ஊ) செந்தமிழ்

27. சான்று தந்து விளக்குக : **1x4=4**

நெய்தல் திணை

**(அல்லது)**

பொருண்மொழிக் காஞ்சித் துறை

28. ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை **1x4=4**

இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

- மேற்காண் குறளில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

**(அல்லது)**

எடுத்துக் காட்டு உவமையணி **(அல்லது)** சொற்பொருள் பின்வரு நிலையணி சான்று தந்து விளக்குக.

VIII. பொருத்துக : **4x1=4**

| | நூல் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| 29. | இராசராச சோழனுலா | - | பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் |
| 30. | திருவேங்கடத்தந்தாதி | - | குமரகுருபரர் |
| 31. | மதுரைக் கலம்பகம் | - | ஆசிரியர் பெயர் தெரியவில்லை |
| 32. | முக்கூடற்பள்ளு | - | ஒட்டக்கூத்தர் |
| | | - | காரைக்காலம்மையார் |

IX. உரிய விடையினைத் தேர்வு செய்க. **16x1=16**

33. ''ஒன்றேயென்னின்'' என்னும் கடவுள் வாழ்த்துப்பாடல் அமைந்துள்ள காண்டம்
(அ) அயோத்தியா காண்டம்
(ஆ) சுந்தர காண்டம்
(இ) யுத்த காண்டம்

34. தமிழரசி குறவஞ்சி யாருடைய தலைமையில், அரங்கேறியது?
(அ) ஞானியாரடிகள்
(ஆ) உமா மகேசுவரனார்
(இ) அப்பாசாமிப்பிள்ளை

35. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள்
(அ) 11 (ஆ) 65 (இ) 75

36. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
(அ) குறிஞ்சிப்பாட்டு
(ஆ) முல்லைப்பாட்டு
(இ) பரிபாடல்

37. நற்றிணைப் பாடல்களின் அடிவரையறை
(அ) 4 - 8 அடி வரை
(ஆ) 9 - 12 அடி வரை
(இ) 13 - 31 அடி வரை

[ திருப்புக

38. பொருட்பாலிலுள்ள இயல்கள்

(அ) பாயிரவியல்; இல்லறவியல், துறவறவியல், ஊழியல்

(ஆ) அரசியல், அங்கவியல், ஒழிபியல்

(இ) களவியல், கற்பியல்

39. ''வள்ளுவனைப் பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே'' என்று போற்றியவர்

(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) வாணிதாசன்

40. வரி என்பது __________ வகையது.

(அ) சந்தப்பாடல் (ஆ) கலிப்பாடல் (இ) இசைப்பாடல்

41. 'சுந்தரன்' என்னும் பெயரால் இராமாயணத்தில் அழைக்கப்படுபவன்.

(அ) அனுமன் (ஆ) இராவணன் (இ) இலக்குவன்

42. தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவர்

(அ) இயேசுபெருமான்

(ஆ) சூசைமாமுனிவர்

(இ) தாவீதன்

43. 'புலன்' - என்னும் இலக்கிய வகை

(அ) கலம்பகம் (ஆ) உலா (இ) பள்ளு

44. 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' - என்னும் பாடலைத் தமிழ் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ள அரசு.

(அ) தமிழக அரசு (ஆ) புதுவை அரசு (இ) பிரெஞ்சு அரசு

45. பிரெஞ்சுக் குடியரசுத் தலைவரால் செவாலியர் விருதினைப் பெற்றவர்

(அ) பாரதிதாசன் (ஆ) வாணிதாசன் (இ) முடியரசன்

46. ''உத்தர காண்டம்'' எழுதியவர்

(அ) கம்பர் (ஆ) வான்மீகி (இ) ஒட்டக்கூத்தர்

47. சுந்தரர் தேவாரம்

(அ) முதலாம் திருமுறை

(ஆ) ஏழாந்திருமுறை

(இ) பன்னிரண்டாந்திருமுறை

48. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி

(அ) சதுரகராதி (ஆ) பேரகராதி (இ) அரும்பத அகராதி

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2x2=4

49. எழுமை __________ உள்ளுவர் தங்கண்

விழுமந் துடைத்தவர் __________.

50. அறிவற்றங் காக்குங் __________ செறுவார்க்கும்

உள்ளழிக்க லாகா__________.

- o O o -